


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (8.1.2026) அண்ணா அறிவாலயத்தில், அ.தி.மு.க. சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சுப்புரத்தினம், பாலகங்காதரன் ஆகியோர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைந்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, கழக பொருளாளர் டி.ஆர். பாலு, அமைச்சர் அர. சக்கரபாணி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் மனோஜ் பாண்டியன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில், 49–வது சென்னை புத்தகக் காட்சி 2026–ஐ தொடங்கி வைத்து, அங்கு அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, வி.ஜி.பி. குழும தலைவர் வி.ஜி.சந்தோசம், தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கத்தின் (பபாசி) தலைவர் ஆர்.எஸ்.சண்முகம், துணைத் தலைவர்கள் நக்கீரன் கோபால், வே.புருஷோத்தமன், செயலாளர் எஸ்.வயிரவன், பபாசி சங்க நிர்வாகிகள், விருதாளர்கள், புத்தகப் பதிப்பாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.1.2026) சென்னை, சிந்தாதரிப்பேட்டை உலகப்பா மேஸ்திரி தெருவில் செயல்பட்டு வரும் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்க நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழுக் கரும்பு மற்றும் ரூ.3000/–ம் ரொக்கம் ஆகிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் வேட்டி, சேலைகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றாக, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் திருமதி கி. கவிதா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையர் திருமதி கோ. லட்சுமி மற்றும் குடும்ப அட்டைதாரர்கள் உடனிருத்தனர்.

# இந்தப் பொங்கல் மகிழ்ச்சிப் பொங்கல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூகவலைதளப் பதிவு!







## இதுவரை ரூ.6 கோடியே 39 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 39 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 08-01-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

## நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | டி.சுந்தர்ராஜ், செங்குடி, வழுவூர் அஞ்சல், குத்தாலம் வட்டம், மயிலாடுதுறை | – 25,000/– |
| 2. | உ.மருதையன், கோவில்வெண்ணி, நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் | – 25,000/– |
| 3. | என். கலியமூர்த்தி, அழகியமணவாளம் பெரியார் நகர், திருமானூர், திருச்சி | – 25,000/– |
| 4. | சி. கலியமூர்த்தி, திருவெங்கனூர் கிராமம், வடுகபாளையம் மஜரா, அரியலூர் | – 25,000/– |
| 5. | ஆர்.பாலு, நடுத் தெரு, எடப்பாடி, சேலம் மாவட்டம் 637 101. | – 25,000/– |
| 6. | கு.சண்முகசுந்தரம், 7வது வார்டு, பாண்டமங்கலம், நாமக்கல் மாவட்டம். | – 25,000/– |
| 7. | எம். ஜாபர் அலி, மதருசா வீதி, ஆனைமலை, கோவை மாவட்டம். | – 25,000/– |
| 8. | பெ.சுப்பிரமணியம், தா.காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் மாவட்டம். | – 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் களக்காட்டூர் ஊராட்சி குருவிமலை நியாய விலை கடையில் தமிழ் புத்தாண்டு பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் இலவச வேட்டி சேலை மற்றும் பொங்கல் தொகுப்பினை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் க. குமணன், ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் திருமதி.திவ்யப்பிரியா இளமது, ஊராட்சி மன்ற தலைவர் திருமதி நளினி பாபு உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.